17

# காந்தீயம்

அகில இலங்கைக் காந்தி சேவா சங்கத்தின் திங்கள் வெளியீடு

Registered at the G. P. O. as a Newspaper in Ceylon

விலை சதம் 10

**அறிவிப்பு**

காந்தீய - சர்வோதய இலட்சியங்களுக்கமைய கிராமங்களிலும் நகரங்களிலும் சேவை செய்வதற்கு ஊழியர்கள் தேவை விபரங்களுக்கு:-

காந்தி நிலையம்
உருத்திரபுரம்

மலர் 8 | காந்தி நிலையம் - உருத்திரபுரம் (காந்தி ஆண்டு 101) 1970 நவம்பர் | இதழ் 2

# வாரம் ஒரு கருத்தரங்கம்

''அனைவரும் கூடி உழைத்து வாழ்வதே சர்வோதயத்தின் திறவுகோல்; சேர்ந்து உற்பத்தி செய்வதைச் சமமாக அனைவரும் பங்கிட்டுக் கொண்டு வாழ்வதே சர்வோதய முறை'' காந்தீயத்தின் அடிச்சுவட்டிலே செல்கின்ற விநோபா அடிகள், உலகம் உய்திபெறக்காட்டும் சர்வோதயக்கொள்கையின் கருப்பொருள் இது. பொதுவுடைமைக் கொள்கையின் கருப்பொருள் இதுவே. இரண்டுக்கும் சமதர்மசமுதாய அமைப்பே இலட்சியம். ஆனல் இரண்டுக்கும் இலட்சியத்தை அடையும் வழியிலே தான் வேறுபாடு உண்டு. சத்தியத்தோடும் அகிம்சையோடும் கூடிய செயன்முறையே இலட்சியத்தை அடைதற்கான உயரிய நெறிஎனச் சர்வோதயம் கருதுகிறது. இரத்தப்புரட்சியும் பலாத்காரமுமே உயரிய நெறி எனப் பொதுவுடமை கருதுகிறது. போர்வெறி கொண்ட நாட்டுத்தலைவர் சிலரை விடுத்து, சாதாரண நிலையிலுள்ள உலகப்பொது மக்கள் சமாதானம், சகவாழ்வு என ஆத்மாவினல் குரல் கொடுக்கும்போது, புரட்சியும் பலாத்காரமும் பயன் விளைவிக்குமென்று கருத இடமில்லை. அதுவும் ''பெயக் கண்டும் நஞ்சுண்டமைவர் நயத்தக்க நாகரிகம் வேண்டுபவர்'' என்ற வள்ளுவர் நெறியையும், புத்தபகவானின் கருணை நெறியையும் கைக்கொள்ளும் கிழக்காசிய மக்களுக்கு அவை ஒரு சிறிதும் பொருந்தா. அன்றியும் ''இலட்சியம் எத்துணைச் சிறந்ததாயினும் அதனையடையும் வழி தூய்மையுடையதாய் இருத்தல் வேண்டும். அன்றேல் இலட்சியம் மதிப்பிழந்துவிடும்'' என்ற காந்தியண்ணலின் கருத்தும் எமக்கு உறுதுணையாக இருக்கிறது. ஆக, சமதர்ம சமுதாயம் மலர்வதற்கு உலகிலுள்ள ஒரேயொரு நெறி சர்வோதய நெறியே.

தீவிர பொதுவுடமை வாதிகள், புரட்சியிலும் பலாத்காரத்திலும் பற்றுள்ளங்கொண்டோர், இதனைக்கேட்டு எள்ளிநகையாடலாம்; துச்சமாக மதித்து அலட்சியம் செய்யலாம். அவர்கள் அன்பின் ஆற்றலை உணராதவர்கள்; சத்தியத்தின் சத்தி தெரியாதவர்கள். அவர்களுக்காக ஒரேயொரு உதாரணம்: மத்தியஇந்தியாவிலே சம்பல் நதிதீரத்து மலைப்பிரதேசத்தில் வாழ்ந்த கொள்ளைக்கூட்டத்தினரை அடக்க இந்தியப் பொலீசார் செய்த சாகசங்களும் பலாத்காரங்களும் படுதோல்வியடைய, விநோபா அடிகளின் அன்பும் சத்திய போதனையும் வெற்றியளித்தன. கொள்ளைக்காரர் அடிகளாரை வந்து சரணடைந்ததும், குற்றம் புரிந்தவன் தண்டனை அனுபவிக்க வேண்டும் என்ற அடிகளாரின் போதனைப்படி அவர்கள் அரசு வழங்கிய தண்டனையை மகிழ்வுடன் ஏற்றுக் கொண்டதும் உலகறிந்த செய்திகள்; சர்வோதயக்கொள்கையின் மாபெரும் வெற்றிகள். சத்தியத்தில் வேரூன்றி, அன்பாய் வளர்ந்து, அகிம்சையாய் மலர்ந்த இந்த வெற்றியே நிலை நிற்கவல்லது; உலகினை உய்விக்க வல்லது.

சர்வோதயக் கொள்கைகள் உலகெங்கும் பரவிடவேண்டும். கொள்கை விளக்கமும் சாதனையும் ஒன்றிணைந்து இயலுதல் வேண்டும். இந்த முயற்சியில் எமக்குப்பெரும் பொறுப்புண்டு. அந்தப் பொறுப்பின் ஒரு சிறு கூறே வாரம் ஒருமுறை நடக்கும் சர்வோதயக் கருத்தரங்கம். நோன்மதி தினங்களுக்கு அடுத்து வரும் நாள்களில் கொட்டாஞ்சேனை விவேகானந்த மகாவித்தியாலயத்தில் நடைபெறும் இக் கருத்தரங்கில் இடம்பெறும் பொருள்களனைத்தும் சர்வோதயக் கொள்கைக்கு விளக்கம் தருவன. காந்தீய பொருளாதாரம், சர்வசமய சமரசம், காந்தியும் தேசீயமும், காந்தியும் கார்ல் மாக்சும், சுதேசியம், சுயதேவைப் பூர்த்தி, பூதானம் சாந்திசேனை, சர்வோதயமும் உலகமதமும், காந்தீய சோஷலிஸம் முதலிய இன்னோரன்ன பொருள்கள் பற்றிக்கருத்துரை நிகழும். வயது வேற்றுமையின்றி, இன மத வேற்றுமையின்றி எல்லோரும் கலந்துரையாடி கொள்கை விளக்கம் பெறுவது நன்று; முக்கியமாக இளைஞர்களுக்கு, அறிவுத்தாகம்கொண்ட இளம் உள்ளங்களுக்கு இது ஒரு நல்ல சந்தர்ப்பம். முடிவாக, இந்தச் சர்வோதயக் கருத்தரங்கம் நற்பயன் விளைந்திடும்படி செய்வது உங்கள் பொறுப்பு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காந்தீயம்

உருத்திரபுரம், (இலங்கை)

தொலை பேசி: 254

கிளிநொச்சி.

காந்தி ஆண்டு 101

1970 நவம்பர்

## அந்நியம்

இவ்வுலகில் மக்களிற் பெரும்பாலோர் அந்நியராய் வாழ்கிருர்கள். அந்நியராய் வாழ்தல் என்ருல் என்ன? மனிதனுக்கு இயற்கை அளித்த வாழ்வினை வாழ முடியாதவர்களாக இவர்கள் வாழ்கிருர்கள் என்பதே அது, இயற்கை அளித்த செல்வங்களான நிலம், நீர், காற்று, ஆகாயம், ஒளி ஆகியவற்றை முறைப்படி தம் உபயோகத்திற்குபயன்படுன்படுத்தமுடியாமல் பல்கோடிமக்கள் துன்பப்படுகிருர்கள். இங்குகூறியஐந்து இயற்கைப் பொருள்களுள்ளும் மிக முக்கியமானது நிலம். நிலமிருந்தால்மற்றையயாவற்றையும் மனிதன் பெறலாம்.

ஒவ்வொருமனிதனுக்கும் போதிய நிலமிருந்தால் அவன் பயிரிடலாம். வீடுகட்டலாம். நிலம் குறைந்தால், பயிரிடமுடியாது வீடுகட்டமுடியாது வீட்டுநிலம் குறையின் நீர் குறையும் ஒளிகுறையும், காற்றுக் குறையும். மனிதனை இந்தஇயற்கை அளித்த செல்வங்களைச் சரிவர நுகரமுடியாமல் செய்வது இப்பொழுதுள்ள சமூக அமைப்பு.

ஒவ்வொரு மனிதனுக்கும் போதிய காணிபூமிஇருப்பின் அவர்களிற்பெரும்பாலோர் பயிர்ச்செய்கையில் ஈடுபட்டிருப்பார்கள். வேலையற்றிருப் போரிற் பலர் நாட்டுக்குச் சொந்தமான நிலத்தையும் நீரையும் பகிர்ந்து பெற்றிருந்தால் தம்வாழ்வைச் சீர்பெற அமைத்திருப்பார்கள். பல மனிதரை நிலத்தின் பயனை அடைய விடாமல் செய்த சமூக அமைப்பு இயற்கைக்கு மாருனது. இது மனிதனைஇயற்கையிலிருந்தும்அந்நியப் படுத்துகின்றது. வள்ளுவர்வேலையில்லாதிருப்பனைவப்பார்த்து''நிலம் என்னும் நல்லாள் நகும்'' என்று சொன்னுர். அந்நாளில் நிலம்எல்லோருக்கும்கிடைக்கக் கூடிய தாயிருந்தது. இப்பொழுது நிலம் அரசாங்கத்திற்கும் முதலாளிகட்குமிடையில் பகிரப்பட்டுவிட்டது.ஏழை மக்கள்என்னசெய்வர்.இதுமட்டுமன்று.

கைத்தொழில் அபிவிருத்தி யென்பது ஒன்று தோன்றிப் பட்டினங்கள் விருத்தியடைந்தன. கிராமமக்கள், நிலம் கிடையாத வரும் நிலத்தில்வேலை செய்ய நாட்டமில்லாத வரும், பட்டினங்களை நோக்கிப் படை எடுக்கின்றனர் நிலங்கிடையாமல்அந்நியமானர் ஒருசாரார். கிடைப்பினும்பட்டின வாழக்கையில் மோகங்கொண்டு நிலவாழ்வை விடுபவர் ஒரு சாரர்.இவரும் அந்நியமானவரே

மாகத்மா காந்தியடிகள்பல காலும் கிராம வாழ்க்கையையும் கிராமராச்சியத்தையும் போதிப்பது எதற்கு மனிதனைப் பட்டிக்காட்டாளுக வாழ வேண்டியா? அன்று. இயறகையோடு அணைந்த வாழ்வை மனித சமூகத்தில் நிறுவவும், மற்றவர்களைச் சுரண்டி வாழும் ஒருதன்னலக் கும்பலை ஒழிக்கவுமேயாம்.

கிராமத்தை விட்டு வெளியேறியவர்கள் கதிஎன்ன? சிலகிராமங்களில் கூலிக்கு வேலை செய்பவர்கள் போல் இவர்களும்பெரியகைத்தொழில், வியாபார நிலையங்கட்குத் தம்மை அடைவு வைத்து வாழ்கிருர்கள். இங்கு இவர்கள் வேலை பிறருடைய கட்டளைக் கிணங்க, படுத்து உறங்குவது பிறர்கட்டித்தந்த வீடுகளில். இவர் உண்பது நுகர்வது பிறர் தம்சுயநல இலாபம் கருதி உற்பத்தி செய்தவலை பொருள்களை. இங்கும் இவர்கள் தம் இயல்பின்படி நடக்கிருர்களா? இல்லை. இவர்க்குச் சுயநினைவு இல்லை, சுய இச்சை இல்லை. சுயவிருப்பம் இல்லை.

மற்றையோரைப்போல்பொருமையாலும், அவாவினுலும், போலிக் கௌரவத்தாலும், இவர்கள் தம் வாழ் முறையை அமைத்துக் கொள்கிருர்கள்.இங்குஇவர்களின்அந்நிய நிலை இரண்டாம் முறையாக உறுதிபெற்று வலுவடைந்து விடுகிறது. இந்நிலையில் மனிதனின் வாழ்வுமுறை அடிமைப்பட்ட வாழ்வாகவே மாறுகின்றது இந்நிலையில் வாழ்பவர்தாம் அறிவாளி என்று தம்முள்நினைக்கலாம். ஆயின் இவர் செயற்கையானசுயநலம் மிகுந்த சமூக அவாக்களுக்கு அடிமைப்பட்டவராகவே இருப்பர்.

கிராமசுயராச்சியம் ஏன் மனித உயர்விற்குத்தேவை என்பது இப்பொழுது ஓரளவிற்குப் புலப்படும் என்று நினைக்கிறேன். அகிம்சை வாழ்வின் ஆரம்பப்படிதான் கிராமராச்சியம். கிராமராச்சியம் என்பது பிற்போக்கான நாகரிகமன்று, மிகஉயர்ந்த நாகரிகத்தின் தத்துவப்படி,

அந்நியம்என்றசொல்லின் பொருளை நாம் நன்கு உணர்ந்திருத்தல்அவசியம், முதலாவது நிலையில் சிலரோ பலரோ சமூகஅமைப்பின்இயல்பினுல் இயற்கையோடு இணைந்து வாழமுடியாமலிருத்தல். இரண்டாவது, தம் பகுத்தறிவிற்கோ இணங்கநடக்க முடியாமல் சுய நலம் மிகுந்தசமூக அமைப்பில் கட்டுப்பட்டு வாழ்தல்.இந்நிலையில்மனிதன் தனக்குச் சுயமான இயல்பிற்கு அந்நியமாக்கப்பட்டு விடுகிருன்.

## சம்பத்துத் தானம்

சர்வோதய நிகேதனத்தில் இருக்கும் மாணவர்களின் செலவுக்காக சம்பத்துத்தானம் அளித்தவர்கள்.

| | | |
|---|---|---|
| செல்வன். சஞ்சீவன்-சிவலிங்கம்<br>விவேகானந்தா அவென்யூ<br>கொழும்பு—6 | 10 | 00 |
| திருமதி. சீவரத்தினம்<br>தமிழ்க் கலவன் பாடசாலை<br>தெகிவளை | 10 | 00 |
| திருமதி. ம. குமாரசாமி<br>7, மல்வத்த அவென்யூ<br>நுகேகொட | 5 | 00 |
| திரு- க. சுந்தரலிங்கம்<br>அராலி-மேற்கு வட்டுக்கோடை | 2 | 00 |
| திரு. அ. சிவசுப்பிரமணியம்<br>மின்சாரசபை<br>கொழும்பு—2 | 15 | 00 |
| திரு. சி. சண்முகம்<br>38, சென். பெனடிக்ஸ் வீதி<br>கொழும்பு—13 | 20 | 00 |
| திரு. ஆ. செல்லத்துறை<br>பிரதிநிதிகள் சபை<br>கொழும்பு | 7 | 00 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சேவைஅரசியல் உருவாகவேண்டும்

எங்கு பார்த்தாலும், வன்முறையும், அமைதியின்மையும் தலை விரித்தாடுகிறது. காந்திஜி கனவுகண்ட கிராமராஜ்யம் சேவை அரசியலை அடிப்படையாகக் கொண்டது. ஆகையால் இன்றைய இன்னல்கள் தீர சேவை அரசியல் உருவாக வேண்டுமென்று மதுரையில் நடைபெற்ற விநோபா அடிகளின் 75 ஆவது பிறந்த நாள் விழாவில் சங்கரராவ்தேவ் கூறினார். இவர் காந்தி சேவாசங்க ஆதரவில் யாழ்ப்பாணம்— நீர்வேலியில் 1955 இல் நடைபெற்ற முதலாவது சர்வோதய மகா நாட்டில் பங்கு பற்றியவர் என்பது குறிப்பிடத்தக்கது.

என்னை விநோபா ஜெயந்திவிழாவில் பேசுவதற்கு அழைத்திருக்கிறார்கள் விநோபாஜியின் பிறந்ததின விழாவில் பேசுவதற்குரிய விசேட தகுதி என்னிடம் என்ன இருக்கிறது? ஆனால் ஒன்று விநோபாஜியை காந்தியடிகள் தெரிந்து கொள்வதற்கு முன்னரே நான் அவரைப் பற்றித் தெரிந்து கொண்டுவிட்டேன். அவருடன் இரண்டு ஆண்டுகள் கல்லூரியில் சேர்ந்து படித்தேன். இக்காலத்தைப் போன்று இத்தனை கல்லூரிகள் அன்று கிடையாது அப்போது நாங்கள் இருவருமேபிரஞ்சு மொழியை படித்ததால் இருவருமே ஒரே பெஞ்சில் உட்காரும் வாய்ப்பு கிடைத்தது. ஆகையால் விநோபாஜியைப் பற்றி அறிந்து கொள்ளும் வாய்ப்புஎனக்கு இருந்தது. மற்றவர்களைப்போன்றல்லாமல். இவர் தனி வாழ்க்கை முறையை அமைத்துக் கொள்வார் என்பது ஓரளவு எனக்குத் தெளிவாயிற்று. நாங்கள் இண்டர்மீடியட் தேர்வு எழுத அப்பொழுது பம்பாய் செல்ல வேண்டியிருந்தது. பம்பாய் படௌதாவுக்குத் தெற்கே இருக்கிறது. நான் தெற்கு நோக்கிப் புறப்பட்டேன். ஆனால் விநோபாஜி வடக்கு நோக்கி [பிரம்மத்தைத் தெரிந்து கொள்ளும் ஆவலால் தூண்டப்பட்டு] காசியை அடைந்தார். அதன் பின்னர் தான் அவர் காந்திஜியால் ஆட்கொள்ளப்பட்டார்.

சமீபத்தில் டில்லியில் விநோபா ஜயந்தியைக் கொண்டாட மக்கள் சபை உதவித் தலைவர் தலைமையில் கூட்டம் ஒன்று நடந்தது அதில் கல்வி மந்திரி டாக்டர் வி.கே.ஆர்.வி.ராவ் உரையாற்றியபோது இந்நாடு விநோபாஜியின் சிறப்பைப் புரிந்துகொள்ளவில்லையே என்று வருத்தப்பட்டார். இந்நாடு என்று குறிப்பிட்டபோது இந்நாட்டின் அறிவாளிகள், பிரமுகர்கள், பெரியமனிதர்கள் ஆகியவரைத் தான் அவர் குறிப்பிட்டார் இவ்வளவு பெரிய நிலக்கொடை இயக்கத்தைத் தொடங்கி நடத்திவரும் விநோபாஜியின் ஜயந்திச் செய்தி உள்ளே ஏதோ ஒரு பக்கத்தில் சிறிய எழுத்துக்களில் பத்திரிகைகள் வெளியிட்டுள்ளன இவைகளும் அந்த ரகத்தில் சேர்ந்தவைதானே!

காந்திஜி, ஜவாஹர்லால் நேருவை தனது வாரிசு என்று கூறினார். ஆனால் ஆன்மீக வாரிசுஎன்று யாரையும் குறிப்பிடவில்லை ஏனெனில் அரசியலுக்கு யரையும் வாரிசாகத் தேர்ந்தெடுத்து விட முடியாது. ஆனால் ஆன்மீகத்துக்கு வாரிசு தேர்ந்தெடுக்கப்படுவதில்லை. தானே ஏற்றுக்கொள்வதுதான் மரபு.

தனி நபர் சத்தியாகிரகத்தைத் தொடங்கியபோது முதல் சத்தியாகிரகியாக நேருஜியைத்தான் காந்திஜி தேர்ந்தெடுப்பார் என்று நாடும் உலகமும் எதிர்பார்த்தது. ஆனால் விநோபாஜியைத்தேர்ந்தெடுத்து 'யார் இந்த விநோபா?,, என்று உலகுக்கு அறிமுகப்படுத்தினார். சேவை அரசியலுக்கு விளக்கம் கொடுத்து அதை ஊக்குவித்து வளர்க்கும் திறமை விநோபாஜிக்கு உண்டு என்பதை காந்திஜியே அறிந்திருந்தார். சுதந்திரத்திற்கு பின்னர் காந்திஜி இருந்தால் அவர்கூட மேற்கொள்ள தயங்கி இருக்கக்கூடிய ஒருவேலை திட்டத்தை விநோபாஜி மேற்கொண்டார்.

சுதந்திர தினத்தன்று காந்திஜி தில்லியில் இருப்பதை விரும்பாமல் கல்கத்தாவில் மக்களிடையே இருந்தார் தனக்கு தில்லியில் வேலையில்லை என்று தான் விரும்பிய சுயராஜ்யம் இதுவல்ல என்றும் அவர் கூறிவிட்டார். காந்திஜி அதிகார அரசியலை விரும்பவில்லை. அவர் கனவு கண்டது, பாடுபட்டதெல்லாம் மக்கள் சுயராஜ்யமும் சேவையைஅடிப்படையாகக் கொண்ட அரசியலுமே ஆகும்.

இன்று அரசியல் நடக்கும் இலட்சணத்தைப் பருங்கள்; கட்சிகளிடையே பூசலும், எங்கும் வன்முறைகளும் கதவடைப்புகளும் மலிந்து விட்டன. இதற்கு மாற்று விநோபஜியின் சேவை அரசியலை அடிப்படையாகக் கொண்ட பூதான, கிராமதான இயக்கம் தான். விநோபாஜியின் முயற்சியால் சர்வோதயப் பயிர் செழித்து வளர்ந்துள்ளது, அவைகளை அறுவடை செய்து பயனை அடைய வேண்டும். இப்பணிக்கு மக்கள் எல்லோரும் முன் வந்து உதவ வேண்டும். ஆகையால் இந்த இயக்கம் வளர்ச்சிபெற்றால்தான் காந்தி கண்ட கிராமராஜ்யம் ஏற்படும்.

விநோபாஜிக்கு நீண்ட ஆரோக்கிய வாழ்வு அளிக்கவேண்டுமென்று பிரார்த்திக்கிறேன்.

நன்றி கிராமராஜ்யம்

---

## சிரமதானமுகாம்

கொழும்பு—விவேகானந்த மகா வித்தியாலய சாரணர் இயக்கம், கொட்டாஞ்சேனை ''லெவின் ரைகர்'' விளையாட்டுக்கழகம் ஆகியவைகளைச் சேர்ந்த 50 சிரமதான ஊழியர் நவம்பர் மாதம் 13 ஆம் திகதி இரத்மலானை சர்வோதய நிகேதனத்தில் வாழை நடுதல், காய்கறித்தோட்டம் அமைத்தல் ஆகியவைகட்காகச் சிரமதான முகாம் அமைத்துச் சிறந்த முறையில் பணியாற்றினர். இவர்கள், மேலும் பல சிரமதான முகாம்களை அமைத்து சர்வோதய நிகேதனத்தின் வளர்ச்சிக்கு உழைக்கத் திட்டமிட்டுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சர்வோதய நிகேதன கட்டடநிதி

இரத்மலானை, இந்துக் கல்லூரிச் சதுக்கத்திலுள்ள சர்வோதய நிகேதனத்தில் காந்தி நூற்றுண்டு ஞாபகார்த்தமாகக் கட்டப்பட்டு வரும் கட்டடத்திற்கு நன்கொடை அளித்த அன்பர்கள்.

| | ரூபா | சதம் |
|---|---|---|
| நரோட்டம் பெரேரா லிமிட்டெட் சேர்பாரன் ஜயதிலக்க மாவத்த கொழும்பு. | 100 | 00 |
| திரு. வீரசேன ராஜபக்ஷ ஔுக் ஹவுஸ் முகாம் கொழும்பு 15 | 25 | 00 |
| திரு. க. இராமச்சந்திர ஜயந்திபுர தலங்கம | 25 | 00 |
| திரு. எச். டப்லிவ். அமரசூரிய 541, யூனியன் பிளேஸ் கொழும்பு-2 | 10 | 00 |
| திரு. எஸ். சிவசுப்பிரமணியம் 103/2 கோட்டடித் தெரு கொழும்பு-12 | 10 | 00 |
| திரு. எம். விஜயரத்னம் 84, பழைய சோனகத்தெரு கொழும்பு | 101 | 00 |
| திரு. ஜீ. தம்பிப்பிள்ளை 49, பழைய சோனகத்தெரு கொழும்பு | 101 | 00 |
| திரு. எஸ். ஆறுமுகம் 104, 4 ஆவது குறுக்குத்தெரு கொழும்பு-11 | 250 | 00 |
| ஜனப். எஸ். அப்துல்காதர் 13, கோட்டடித்தெரு கொழும்பு-12 | 500 | 00 |
| திரு. எஸ். பீரிஸ் 64/1 டாம் வீதி கொழும்பு | 350 | 00 |
| திரு. பீ. சங்கரசிவம் 93, புதுச்செட்டித்தெரு கொழும்பு-13 | 150 | 00 |
| திரு ஆர். எம். வள்ளியப்பன் 247, செட்டியார் தெரு கொழும்பு-11 | 100 | 00 |
| திரு. கே. கிருஷ்ணசாமி 41, பங்ஷால் வீதி கொழும்பு-11 | 50 | 00 |

## சர்வோதயப் பாத்திர அன்பர்கள்

சர்வோதய பாத்திரங்களில் நாள் தோறும் பிடிஅரிசியும் காசும்இட்டு இதனை மாதந்தோறும்சர்வோதய இயக்கத்திற்கு அளிக்கும் அன்பர்களின் பெயர்களைக் கடந்தஇதழ்களில் வெளியிட்டிருந்தோம். மேலும் பல அன்பர்களின் பெயர்களை வெளியிடுவதில் மகிழ்ச்சி அடைகிறோம்.

திரு. வி. என். கந்தையா
வன்ரேயன்தெரு, கொழும்பு13
திரு. ரங்கசாமி
கிராண்பாஸ் ரேட், கொழும்பு 14
திரு. எம். ராமசாமிப்பிள்ளை
கன்னரத் தெரு, கொழும்பு 13
திரு. எஸ். சபாபதி
ரேகினிஓழுங்கை, கொழும்பு 11
திரு. வைத்தியலிங்கம்
கல்பொத்தைவீதி, கொழும்பு 13
திரு, ஈ. சுப்பிரமணியம்
மாதம்பிட்டிவீதி, கொழும்பு 15
திரு. பி. எஸ். செல்வராசா
செட்டித்தெரு, கொழும்பு 11
திரு. சு. நடராசா
ஜிந்துப்பிட்டித்தெரு, கொழும்பு 13
திரு. வி. விஸ்வநாதன்
ஸ்ரீகதிரேசன் தெரு கொழும்பு 13
திரு. எஸ் செல்வராஸ்
ஸ்ரீ கதிரேசன் தெரு, கொழும்பு 13
திரு ஏ.ஆறுமுகம்
வன்ரேயன் தெரு, கொழும்பு 13
திரு.எச். சந்திரா
செட் டித்தெரு, கொழும்பு 13
திரு. வீ. செல் வத்துரை
புவாக்வத்தைத் தெரு, வத்தளை
திரு. வீ. கதிரேசன்
ஸ்ரீ கதிரேசன்தெரு, கொழும்பு 13
செல்வி. செ. மல்லிகா
பீச் தெரு, கொழும்பு 11
திரு. எஸ். பெனடிக்ற்
செக்கடித்தெரு, கொழும்பு 13
திரு. கி. ராமசாமி
மேட்டுத்தெரு, கொழும்பு 13
திரு. எஸ். பாலையா
பிக்கறின்ஸ்தெரு, கொழும்பு 13

## வரவு செலவு

அகில இலங்கைக் காந்தி சேவா சங்க கொழும்புக் கிளை சர்வோதய நிகேதனம் [ 1970 ஒக்ரோபர்] வரவு செலவு விபரம்.

| வரவு | ரூபா | சதம் |
|---|---|---|
| கையிருப்பு | 49 | 34 |
| சர்வோதயபாத்திரம் | 7 | 63 |
| சம்பத்துத்தானம் | 4 | 50 |
| விடுதிக்கட்டணம் | 70 | 00 |
| காந்தீயம் | 10 | 00 |
| அரிசி | 24 | 00 |
| கட்டடம் | 10 | 00 |
| கோகுலம் | 4 | 60 |
| மொத்தம் | 180 | 07 |
| **செலவு** | | |
| உணவு | 48 | 16 |
| பிரயாணம் | 20 | 85 |
| தபால் | 3 | 75 |
| சலவை | | 15 |
| மாணவர்செலவு | 11 | 00 |
| வெளிச்சம் | 25 | 00 |
| சர்வோதய அச்சகம் | 1 | 00 |
| நானுவிதம் | 2 | 50 |
| ஏற்ற இறக்க | 2 | 40 |
| கோகுலம் | 1 | 25 |
| வயித்தியம் | 1 | 55 |
| கையிருப்பு | 62 | 46 |
| மொத்தம் | 180 | 07 |

## செய்திகள்

சர்வோதய பாத்திரங்கள் மூலம் ஒக்ரோபர் மாதம் 106 வீடுகளிலிருந்து 81கொத்து அரியும் 6 ரூபா 21 சதமும் பெறப்பட்டது.

★ ★ ★ ★

பம்பலப்பிட்டி - கனிஷ்ட இந்துக் கல்லூரி சர்வோத்ய பாத்திர இயக்கம் மூலம் 108கொத்து அரிசியும் 21 ரூபா 40 சதமும் கிடைத்துள்ளது.

இப்பத்திரிகை அகில இலங்கைக் காந்தி சேவா சங்கத்திற்காக உருத்திரபுரம் சி.க. வேலாயுதபிள்ளை அவர்களால் இரத்மலானை காந்திசேவா சங்க சர்வோதய அச்சக உபகரணங்களின் உதவியுடன் கொழும்புகுமரன் அச்சகத்தில் அச்சிடப் பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org